**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் - 59/2022**

**வாதி தரப்பு சாட்சி-1 பிச்சைமுத்து - திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 28.08.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>**

1) நான் 1988 ல் அரசு வேலைக்கு வந்தேன் என்றால் சரிதான். நான் அரசு வேலையில் இருந்தேன் என்றும், எனக்கு சொத்து குறித்த ஆவணங்களை பதிவு செய்ய வேண்டும் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல, எனக்கு தெரியாது. நான் குத்தகைக்கு ஓட்டியதாக சொல்லும் காலக்கட்டத்தில் அரசு மானியமோ அல்லது அரசு பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் ஏதிலேனும் பதிவு செய்துள்ளேனா என்றால், வங்கியில் கடன் பெற்றுள்ளேன். அந்த ஆவணங்களை தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் செய்திருக்கிறேன். நான் வாழை, கரும்பு பயிர் செய்ததாக சொல்லியுள்ள நிலையில் ஒவ்வொரு பயிருக்கும் தனித்தனியாக காப்பீடு செய்திருந்தேனா என்றால், அப்போது காப்பீடு செய்யும் திட்டம் இல்லை, வங்கியில் கடன் பெற்றபோது அந்த கடனிலேயே காப்பீட்டிற்கான தொகையை சரிசெய்து கொள்வார்கள். எனது தகப்பனார் இறப்பதற்கு முன்பு என்னை விவசாயம் செய்ய சொன்னதாக நான் வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யானது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள பிரதிவாதியின் கையெழுத்து திருத்தி எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, மேற்படி ஆவணங்களில் உள்ள சங்கதிகள் அனைத்தும் ஒரே மையினால் எழுதப்பட்டதா என்றால் ஆமாம்.

2) நான் சொல்வது தவறு என்றும், வா.சா.ஆ.2 ஆவணத்தில் பிரதிவாதி கையெழுத்தே போடவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணம் பிரதிவாதியால் ஏற்படுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. 2008 – 2010 ற்கு இடைப்பட்ட காலத்தில் நம்பிக்கையின் அடிப்படையில் எந்த ஆவணமும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை என நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. 1997 ம் வருடத்திற்கு பின்னிட்டு 2007 ம் வருடம் வரை இடைப்பட்ட காலத்திற்கான ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் குத்தகைக்கு ஓட்டிவந்தது குறித்து சட்டப்படியான எந்த ஆவணங்களையும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. உண்மையில் பிரதிவாதி வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி பணம் கொடுக்காமல் இருந்திருந்தால், எனது தகப்பனார் இருந்த காலத்திலேயே அவர்மீது சட்ட நடவடிக்கை எடுத்திருப்பார் என்றும், ஆனால் எனது தகப்பனார் அவ்வாறு எந்த சட்ட நடவடிக்கையும்

எடுக்கவில்லை என்றால், எனது தகப்பனாருக்கு அவ்வளவாக விபரம் தெரியாது. நான் வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சுந்தரமூர்த்தி என்வரும், பிரதிவாதி மற்றும் ராதாகிருஷ்ணன் மூவரும் சகோதரர்கள் என்றால் சரிதான்.

3) நான் ராதாகிருஷ்ணன் பாக சொத்தை விலைக்கு வாங்கியுள்ளேனா என்றால் இல்லை, மூன்று பேரின் சொத்தையும்தான் விலைக்கு வாங்கினேன். சிவக்குமாருக்கு பிரிந்த பாக சொத்தை விலைக்கு வாங்கியுள்ளேனா என்றால் ஆமாம், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கும், அவரது சகோதரர்களுக்கும் இடையே பாகம் பிரித்தது தொடர்பாக பிரச்சினை உள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு மேற்படி விபரம் தெரியும் என்றும், அதை வழக்கிற்காக மறைக்கிறேன் என்றால் சரியல்ல. சுந்தரமூர்த்திக்கும், பிரதிவாதிக்கும் பாகம் பிரித்துக் கொள்வதில் பிரச்சினை உள்ளது என்றும், சுந்தரமூர்த்தி எனது சிறுவயது முதல் நண்பர் என்றும், எனவே அவருடன் கூட்டு சேர்ந்து கொண்டு பிரதிவாதியின் சொத்தை அபகரிக்க பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் சுந்தரமூர்த்தியை வைத்து வாங்கியுள்ளேன் என்றும், சுந்தரமூர்த்திக்கும், பிரதிவாதிக்கும் ஏற்கனவே பிரச்சினை உள்ளது என்றால் சரியல்ல.

4) வா.சா.ஆ.5 அஞ்சலக ஒப்புதல் அட்டையை சுந்தரமூர்த்திதான் கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரியல்ல. உண்மையில் நான் பிரதிவாதிக்கே வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றும், பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பை வாங்கியிருந்தார், அவர் பதிலறிவிப்பு கொடுத்திருப்பார் என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கில் ஒருதலைப்பட்ச தீர்ப்பு ஏற்கனவே பெற்றேன் என்றால் சரிதான். பிரதிவாதி ஆஜராகததால் ஒருதலைப்பட்ச தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டது என்றால் அதுபற்றி தெரியாது. எனது தகப்பனார் பிரதிவாதியிடம் பணத்தை பெற்றக் கொண்டார் என்றும், அதனால்தான் அவர் எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் எனக்கு எதேச்சையாக கிடைத்த வா.சா.ஆ.1 ஆவணத்தை வைத்துக்கொண்டு வா.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணங்களை மோசடியாக தயார் செய்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பொய்யான சங்கதிகளின் அடிப்படையில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

5) தாவா சொத்திற்கு நான் சட்டப்படியான குத்தகைதாரர் அல்ல என்றும், பிரதிவாதிதான் தாவா சொத்தின் சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றும், எனவே தாவா சொத்தில் இருந்து என்னை அனுப்ப வேண்டிய அவசியம் பிரதிவாதிக்கு இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் சுவாதீனத்தில் பிரதிவாதி உள்ள நிலையில், எனது

**சுவாதீனத்தை பிரதிவாதி இடையூறு கொடுத்ததாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிதான் இவ்வழக்கிற்கு முன்பும், தற்போது வரையிலும் சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றும், அவர் எப்போதும் என்னிடம் பிரச்சினை செய்ததில்லை என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும், பிரதிவாதிகளின் செலவுத் தொகையுடன் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.**

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி

**Principal District Munsif,**

**Kulithalai.**